அ.வ.எண்: 38/2017 நாள்: 12.03.2026

வா.சா.2 –

பன்னீர் செல்வம்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. வாதி மாயழகு என் தகப்பனார் என்றால் சரிதான். நான் சாட்சியமளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான், என் தந்தை அழைத்ததன் பேரில் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் எனக்கு பங்கு உள்ளதா என்றால் உள்ளது. என் தகப்பனார் எனக்கும் பங்கு உள்ளது என்று கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் இரண்டு சகோதரிகள் ஆவர் அவர்களுக்கும் தாவா சொத்தில் பங்கு உள்ளதா என்றால் அதை பெரியவர்கள் முடிவு செய்து கொள்வார்கள். எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது தம்பி கணேசன் என்று குறிப்பிட்டுள்ளேன். எனக்கு அவ்வாறு தம்பி கணேசன் என்று யாரேனும் உள்ளாரா என்றால் இல்லை, அது என் தந்தையின் தம்பி ஆவார். எனது தகப்பனார் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தை அப்படியே காப்பி செய்து எனது நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்ததால் மேற்சொன்னவாறு எனது தம்பி என்று

வந்துள்ளது என்றால் சரிதான்.

2. நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1980 ஆம் ஆண்டு பிறந்தேன். நான் பிறப்பதற்கு முந்தைய ஆவணங்களை பற்றி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், அந்த ஆவணங்களை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது தகப்பனார் பெற்ற கிரைய பத்திரம் எத்தனையாவது ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் தான் அனுபவம் செய்த சொத்தை கிரையம் வாங்கினாரா அல்லது கிரையம் வாங்கிய பிறகு மேற்படி சொத்தை அனுபவம் செய்தாரா என்றால், அவர் அனுபவம் செய்து வந்த சொத்தை தான் கிரையம் வாங்கினார். அதனால் எனது தகப்பனார் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தில் அதில் கண்ட சொத்து என் தகப்பனார் அனுபவத்தில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் எத்தனை கிரைய பத்திரங்கள் வாங்கினார் என்றால் இரண்டு கிரைய பத்திரங்கள் வாங்கினார். எனது தகப்பனார் வாங்கிய கிரைய பத்திரத்தில் டி.எஸ்.நம்பர் என்னவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் டி.எஸ்.நம்பர்.32/1 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் எத்தனாவது ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. மேற்படி டி.எஸ்.நம்பர் 32/1–ஐ தான் எனது தகப்பனார் கிரயம் பெற்றார் என்றால் சரிதான், அந்த கிரைய ஆவணத்தில் நீள அகலம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்துக்காக தான் நாங்கள்

வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எனது தகப்பனார் வாங்கிய கிரைய பத்திரங்களில் நீள அகலம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், மொத்த அளவு மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது தகப்பனார் நல்ல விவரமான தெளிவான மனிதர் என்றால் சரிதான், ஆனால் வயது மூப்பின் காரணமாக அவருக்கு மறதி வந்து விட்டது. அதற்கான மருத்துவ சான்றிதழ் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. எனது தகப்பனார் தான் என்னை சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திற்கு அழைத்தார் என்றால் சரிதான். தாவா வழக்கிற்கான விபரங்களை என் தகப்பனார் தான் கூறியது என்றால் சரிதான். என் தகப்பனார் சொத்துக்களை கிரையம் வாங்கும் பொழுது நான் மைனர் என்றால் சரிதான்.

4. என் தகப்பனார் இதே சொத்துக்கள் சம்பந்தமாக இதே நீதிமன்றத்தில் ஓ.எஸ்.76/2014 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் குறிப்பிட்டுள்ள அதே சொத்துக்களை தான் தாவா வழக்கிலும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்களை தான் தாவா வழக்கிலும் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல, அந்த வழக்கின் தொடர்ச்சியான வழக்கு தான் இது. என் தகப்பனார் பெயருக்கு எந்த டவுன் சர்வே எண்களுக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் டி.எஸ்.நம்பர் 32/1 மற்றும் 32/2ஏ 1 ஆகியவற்றிற்கு பட்டா வழங்கப்பட்டது. மேற்படி பட்டாவை நான்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் பட்டா வழங்கப்படவில்லை, பட்டா வழங்க பரிந்துரை தான் செய்யப்பட்டது. பட்டா வழங்க யார் பரிந்துரை செய்தார்கள் என்றால் நகராட்சி சர்வேயர் பரிந்துரை செய்தார். அந்த பரிந்துரையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன், எத்தனாவது ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. நான் சொன்னவாறு பட்டா வழங்க பரிந்துரை செய்யப்படவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் கிரையம் பெற்ற சொத்துக்களில் ஆவுடையப்பன் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கிய சொத்தில் அளவு குறைகிறதா அல்லது வெங்கடாச்சலம் செட்டியார் என்பவரிடமிருந்து வாங்கிய சொத்தில் அளவுகள் குறைகிறதா என்றால் ஆவுடையப்பன் என்பவரிடமிருந்து வாங்கிய சொத்தில் தான் அளவு குறைகிறது. எவ்வளவு நீள அகலத்திற்கு இடம் குறைகிறது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால், நீள அகலம் தெரியாது அளவு மட்டும் தான் தெரியும். வெங்கடாச்சலம் செட்டியார் கிரையம் கொடுக்கும் பொழுது டவுன் சர்வே எண். 32 உட்பிரிவு செய்யப்பட்டு இருந்ததா என்றால் அது பற்றிய விவரம் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை தான் கிரையம் வாங்கியுள்ளார் என்றும், எனது தகப்பனார் சொத்தில் எந்த வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

6. தாவா சொத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் 1ம் பிரதிவாதியின் தாயார் பெயரில் பட்டா உள்ளது. தாவா சொத்தை பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது என்றும் எனது தகப்பனார் அளித்த சாட்சியத்தை சரி செய்வதற்காக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்தில் தான் வளர்ந்து வந்தேன். அங்கு தான் எனது தம்பியை அடக்கம் செய்துள்ளோம். அவ்வாறு அடக்கம் செய்வதற்கான கட்டுமானங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் கட்டுமானம் செய்யும் வழக்கம் இல்லாததால் அவ்வாறு கட்டுமானங்கள் ஏதும் இல்லை. அவர் என் தம்பியின் சமாதி அங்கு இல்லை என்றும், நாங்கள் அங்கு படையல் வைப்பது வழக்கம் இல்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது பெயருக்கு பட்டா வழங்க பரிந்துரை செய்யப்பட்டது என்று கூறியிருந்தால், அது சரியா தவறா என்றால் தவறு. ஆனால் அதற்கு அடுத்து என் தகப்பனார் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன். நான் நிரூபண வாக்குமூலத்தை படித்து பார்த்து கையெழுத்து செய்தேனா என்றால் படித்து பார்த்தேன், எனக்கு எந்த அளவுக்கு புரிந்தவரை படித்து கையெழுத்து செய்தேன். தாவா சொத்தில் கண்டுள்ள விபரங்கள் தவறு என்றும் தாவா சொத்து எனக்கு பாத்தியம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.03.12 16:22:46 +0530